பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 671 **நாள்: 12.11.2026**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று (12.11.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு-61க்குட்பட்ட எழும்பூர் இரயில் நிலையம் அருகில் உள்ள இலவச ஒப்பனை அறை, காந்தி இர்வின் சாலையின் மையத் தடுப்புகளில் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் வகையில் நடப்பட்டுள்ள செடிகள், எழும்பூர் பல்லவா உணவகத்தில் குப்பைக் கழிவுகளைத் தரம் பிரித்து வழங்குவது குறித்து விழிப்புணர்வு, வார்டு-62க்குட்பட்ட மே தின பூங்கா உள்ளிட்டவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்து, ஒப்பனை அறையினைத் தூய்மையாகப் பராமரித்திடவும், பூங்கா மற்றும் சாலை மையத் தடுப்புகளில் உள்ள செடிகளை தண்ணீர் ஊற்றிப் பராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலம், வார்டு-88க்குட்பட்ட பாடி, சரவணா ஸ்டோர் அருகில் மற்றும் சி.டி.எச் சாலையில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு. அ.தாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-179க்குட்பட்ட வால்மிகி தெருவில் உள்ள அம்மா உணவகம், வார்டு-180க்குட்பட்ட பாரதிதாசன் தெருவில் பள்ளி மாணவர்களின் காலை உணவிற்கான சமையல் கூடம் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு தரமான உணவினை வழங்கிடவும், உணவு பொருட்களின் இருப்பு மற்றும் சமையல் அறையினைத் தூய்மையாகப் பராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மண்டல அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.